1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தடுப்பு நடவடிக்கை எடுக்க ரூ. 27,200 செலவாகும். முள் வேலி போடவேண்டும் என்பதுதான் திட்டம். அதைப் போட்டால் சரியாகிவிடும்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

*** 223 வினா.—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார இணைப்பு வழங்குவதற்கு, மின்சார இணைப்பு பெறுவோரிடம் கடன் பெறுவது என்ற மின்சார வாரியத்தின் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) : மின்சார இணைப்பு பெற விரும்புபவர்கள் தாமாகவே முன் வந்து வழங்கும் கடன்களைத் திரட்டுவதற்கென தமிழ்நாட்டு மின்சார வாரியம் வகுத்தனுப்பிய ஒரு திட்டத்திற்கு 23—9—1968 அன்று அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. இந்த ஆணை இப்போது திரும்பப் பெறப் பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கேள்வியில், 'விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா' என்றதற்கு பதில் கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அவற்றையெல்லாம் ஆராய்ந்து தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

*** 224 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சார கம்பங்கள் தயாரிப்பதை மின்சார வாரியமே தயாரித்துக் கொள்ள அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மின்சார வாரியத்துக்குத் தேவையான வலுப்படுத்தப்பட்ட சிமெண்ட் கற்கலவைக் கம்பங்கள் (R.C.C. Poles) மின்சாரத் துறையாலும் ஒப்பந்தக் காரர்கள் மூலமாகவும் தயாரிக்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அப்படியிருந்தும், சிதம்பரம் தாலுகாவில் இன்னமும் மின்சாரக் கம்பங்கள் இல்லை என்று பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. என்னுடைய ஊரிலேயே அப்படியிருக்கிறது. ஆகவே, உடனடியாக இல்லாத ஊர்களுக்கு கம்பங்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அந்த அபிப்பிராயம் தவறான அபிப்பிராயம் என்று கூறிவிட்டார்களே.

அனாதை இல்லங்களுக்கு மான்யம்

* 225 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வித் துறையின் கீழ் நடைபெற்று வரும் அனாதை இல்லங்களுக்கு (Orphanages) வருடத்திற்கு ஒரு பிள்ளைக்கு ரூ. 100 ஆசக் கொடுக்கும் மானியத்தை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த தேதி முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) & (இ) கல்வித் துறையின் பொறுப்பிலுள்ள அனாதை இல்லங்களில் சேர்க்கப் பட்டுள்ள ஒவ்வொருவர் குறித்தும் ஆண்டு மானியமாக தற்போது ரூ. 120 கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த இல்லங்களில் இருப்பவர் ஒவ்வொருவர் குறித்தும் ஆண்டொன்றுக்குத் தற்போது வழங்கப் படும் மானியத்தை 1—10—1969 முதல் ரூ. 120-லிருந்து ரூ. 144-ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைக்கு அளிக்கப்படும் அறிக்கைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. During the last sitting several reports have been placed on the table of the House. One report is with regard to the fire accidents that took place in the City of Madras and another report deals with the Bus Transport Workers and Students' clash. The third report relates to Vettakkaranpudur. We want to know whether the Hon. Speaker will make arrangements for a discussion to take place on these reports or whether these reports have been placed just for our consumption or notice. Also, will the Government be pleased to give indications as to when these reports would be taken up for discussion on the floor of this House.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் எந்தெந்த அறிக்கைகள், எவ்வெப்பொழுது வைக்கப் படவேண்டும் என்பதைப்பற்றி பிசினஸ் அட்வைஸரி கமிட்டி கூடிப் பேசி, முடிவு எடுக்கிறது. அந்தக் கமிட்டி முடிவு செய்தபடி அறிக்கைகளை வைப்பது நல்லது. கமிட்டி கூடிப் பேசி முடிவெடுத்தபடியே அறிக்கைகள் பேரவையில் வைக்கப்படு கின்றன.